சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. G.கிருஷ்ணன், B.A., L.L.B.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண். 108/2022

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு.சதானந்தம் | த/பெ: வீராசாமி | |
| | | க/பெ : | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | அலைபேசி எண்: | |
| தேதி: | 10.09.2024 | முகவரி: | |

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...

பிரதிவாதி சரவணன் எனது மூத்த சகோதரர் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் புல எண்.143/3 ஏ என்று சொன்னால் சரிதான். எனது சகோதரரான பிரதிவாதி கடந்த 02.10.1973 ல் 9 சென்ட்டை ரெங்கசாமி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். மேற்கொண்டு கடந்த 21.10.1985 ல் 2 சென்ட்டை மேற்படி ரெங்கசாமியிடமிருந்து பிரதிவாதி கிரயம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். அதே தேதியில் நானும் மேற்படி ரெங்கசாமியிடம் 6 சென்ட் நிலத்தினை கிரயம் பெற்றேன். எங்கள் இருவரின் கிரய ஆவணங்களிலும் நாங்கள் இருவருமே மாறி மாறி சாட்சி கையெழுத்து போட்டுள்ளோம் என சாட்சி சாட்சியமளிக்கின்றார். 1973 ல் பிரதிவாதி கிரயம் பெற்ற பின்னர் அந்த சொத்தில் கூரை வீடு கட்டி வீட்டுடன் இணைந்த கீழ்புறமாக மாட்டுத்தொழுவம்

அமைந்திருந்தார் என்று சொன்னால், அவருக்கே மாடுகளே கிடையாது. அவர் வாங்கிய 9 செண்டில்தான் கூரை வீடு கட்டியிருந்தார். பிரதிவாதி கிரயம் பெற்ற 9 செண்டில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. நான் கிரயம் பெற்ற சொத்தில் முதலில் ஓட்டுவீடு கட்டினேனா என்றால் நான் 6 செண்ட் வாங்குவதற்கு முன்பாக எனது பெரியம்மா இருந்த வீட்டில் நான் இருந்தேன். இந்த 6 செண்டை வாங்கிய பின்னர் எனது பெரியம்மா இருந்த வீட்டினையே இந்த 6 செண்டில் சற்று விரிவுபடுத்தி கட்டினேன். நான் என் அண்ணனான பிரதிவாதியுடன் தான் அவரது வீட்டில் வசித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வீடு மற்றும் மாட்டுக்கொட்டகைகக்கும் எனது வீட்டிற்கும் இடையே 3 அடி 6 அங்குலம் இடைவெளியிருந்தது என்று சொன்னால் சரியல்ல, 16 மீட்டருக்கு மேல் இடைவெளியிருந்தது. பிரதிவாதி குடியிருந்த வீட்டினை இடித்துவிட்டு புதிததாக ஆர்.சி.சி.கட்டிடம் கட்டியுள்ளார் என்று சொன்னால் சரிதான். பின்னிட்டு சாட்சி தன்னிச்சையாக அவர் குடியிருந்த வீட்டை இடிக்கவில்லை, தனியாக என்னிடத்தில்தான் பிரதிவாதி புதிதாக ஆர்.சி.சி.கட்டிடம் கட்டியுள்ளார் என சாட்சியமளிக்கின்றார். நான் வாங்கிய 6 செண்டில் பிரதிவாதி கட்டியதாக சொல்லப்படும் ஆர்.சி.சி.கட்டிடம் எவ்வளவு பரப்பளவிற்கு உள்ளது என்று சொன்னால் 4 செண்டில் உள்ளது. நான் அதனருகிலேயே குடியிருந்து வரும் நிலையில், எனது இடத்தில் பிரதிவாதி ஆர்.சி.சி.கட்டிடம் கட்டும் சமயத்தில் நான் எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லையா என்று சொன்னால் நான் ஜோசியம் தொழில்

செய்துவருவதால் வெளியூருக்கு சென்றிருந்தேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில், நான் கிரயம் பெற்ற 6 செண்டில் பிரதிவாதியால் எவ்வளவு இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு ஆர்.சி.சி.கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சரியாக தெரியாததால் நான் அதைப்பற்றி சொல்லவில்லை. எனக்கு செண்ட் கணக்கு தெரியும் என்றும், 1 செண்ட் என்பது 3 குழி என்றும், 6 செண்ட் என்பது 18 குழி என்றும் சொன்னால் எனக்கு கணக்கு தெரியாது. நான் தாவா வழக்குரையில் சொல்லியுள்ள சதுர மீட்டர் கணக்கு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. 200 சதுர மீட்டர் இடத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தாவா வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 200 சதுர மீட்டர் என்பது 15 குழி என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியும் ஜோதிடத்தைதான் தொழிலாக செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். நான் இடத்தை கிரயம் செய்தபோது 17 செண்ட் அளந்து, அதில் 6 செண்டை கிரயம் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பெயரளவிற்கு ஏற்படுத்திக்கொண்ட கிரய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றும், நான் கிரயம் பெறும்பொழுது அதில் கண்ட அளவான 6 செண்ட் இடம் புலத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது சகோதாரர் சொத்தினை வாங்கியதிலிருந்து நீண்ட காலமாக வீடு கட்டி குடியிருந்துவருவதால் நான் கோரும் வசப்பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் சொத்தை 1985 ல் வாங்கியதிலிருந்து எனக்கும், என் அண்ணனான பிரதிவாதிக்கும் பிரச்னை இருந்துவருகிறதா என்றால் இல்லை. எங்களுக்குள்

எப்போதிலிருந்து பிரச்னை இருந்து வருகிறது என்றால் ஆர்.சி.சி.வீடு கட்டிய பிறகு தான் பிரச்னை ஏற்பட்டது. எந்த வருடத்தில் கட்டினார் என்றால் அது எனக்கு தெரியாது. அப்படியென்றால் நான் தாவா சொத்தில் இல்லை என்று சொன்னால் 4, 5 வருடங்களாக ஊரில் இல்லை. நான் தாவா வழக்குரையில் சொத்து விவரத்தில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் நான்கெல்லைகளில் எந்த பகுதியினை பிரதிவாதி ஆக்கிரமித்தார் என்று குறிப்பிட்டு சொல்லாததால் இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற சமயத்திலேயே அந்த பூமியில் நான் கிரயம் பெற்ற அளவிற்கு 6 செண்ட் நிலம் இல்லாததால், நான் விளம்புகை பரிகாரம் கோராமல் வசப்பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்த இத்தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், அதனால் நான் தாக்கல் செய்த தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** - வா.சா.ஆ.1 ஆன 1985 ஆம் தேதிய கிரய ஆவணத்தின் தெளிவான நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.6.

**மறுகுறுக்கு விசாரணை - இல்லை**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.09.11 15:44:49 +0530